கடவுள் துணை.

முனீஸ்வரர் ஜாவளியும் போற்றி விருத்தமும்

வடிவழகி அம்மை

ஆசிரிய விருத்தமும்.

முன்னேச்சுரம் சித்தாந்த வித்தியா சாலை உபாத்தியாயராகிய



எஸ்.என். கணேசபிள்ளையால்

* * இயற்றி * *

கொழும்பு தடடாதெரு

சிவகாமி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

PRINTED AT

The "Sivakamy Press"

August] COLOMBO. [1903.

கடவுள் துணை.

முனீஸ்வரர் ஜாவளியும்
போற்றி விருத்தமும்
வடிவழகி அம்மை
ஆசிரிய விருத்தமும்.

இஃது

முனீச்சுரம்

சித்தாந்த வித்தியாசாலை உபாத்தியாயராகிய

பரித்தித்துறை, புலோலி,

எஸ். என். கணேசம்பிள்ளை

இயற்றி

கொழும்பு தட்டாதெரு

சிவகாமி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

விசேஷ விளம்பரம்.

இத்தால் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டிய தென்னவென்றால்,—தற்காலம் இந்தியர்களால் இலங்கை முதலிய சகல விடங்களிலும் நடாத்திவரும் இந்திரசபாவென்னும் திவ்விய சரித்திரத்தின் பாட்டுகளே யாவர்களும் விரும்பிக்கேட்கவும், தாங்கள் தாங்களே பாடிமகிழ்ச்சிகொள்ளக் கூடியதான நவரசப்பாட்டுக்களாயிருக்கின்றது. அன்றியும் எவரெவர் தனதிஷ்டப் பிரகாரம் வேறுவேறு இராகங்களில் அமைத்துப்பாட வேண்டுமோ, அவைகட் கெல்லாம் பேதமில்லாமலு மிருக்கின்றது. அவை போலவே இதிற் சொல்லிய நவரச ஜாவளிகளையும், எவ்வெவ் விராகங்களி லிசைத்துப் பாடவேண்டுமோ, அப்படிப் பாடிக்கொள்ள ஏற்றதாயும் மிகவும், வெளிப்படையாகவு மிருக்கின்றது. இதன்பின்பு வெளிப்படுத்தப்படும் இரண்டாவது பாகமோ யாவர்மனதுங் கசிந்துருகக் கூடியதாயும், சாட்சாத் பகவானுடைய பாதார விந்தத்தை என்றும் மறவாத நினைவையு முண்டாக்கும்.

உ

சிவமயம்.

முனீஸ்வரர் ஜாவளியும்
போற்றி விருத்தமும்
வடிவழகி அம்மை
ஆசிரிய விருத்தமும்.

வெண்பா.

திங்களொடு கங்கை திகழுஞ் சடைமுடியான்
மங்கை வடிவழகி வல்லியிடப்—பாங்குடையான்
முனைவாச னென்கோன்முனீஸ்வரன் பொற்பாதமலர்
வினைதீர யேத்துவாமே.

வெண்பா.

புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் பாக்கியமுந் தான்வருமே—நித்தியமு
மன்னை வடிவழகி யம்பாளின் பாதமலர்
சென்னிமிசை சூடினார்க்கு.

அவையடக்கம்.

எல்லையிற் பலநூலாய்ந்து யிலக்கண முழுதுந் தேர்ந்த
நல்லியற் புலவர்முன்னே நான்கவி புகலவெண்ணல்
வல்லியற் சேடன் ருங்கும் வார்கடற் புவனந் தன்னை
புல்லிய நாங்கூழ் யானே பரிப்பனென் றெடுத்தல்
(போலாம்.)

குறள்.

கற்றறிஞர் கழல்பரவக் காதலித்தான்
கற்றறியான் சொன்னான் கவி.

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

வேதனை முதலாயுள்ள விண்ணவர்க்குந் தோற்றுமே
மேதகு பிரமன்மேனாள் விழியினாற் கண்டுபோற்ற
மாதிடப் பாகமாகி வடிவொடு வந்து தோன்றும்
ஆதியே முனீச்சுரத்தி லப்பனே யருள் செய்வாயே.

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

எனக்கயன்றன் விதியிதுவோ பூர்வத்தின்
செயல்தானோ வேதோ வம்மா
உனக்கடிமையான பின்பிங்கேது குறை
வந்தாலு முனக்கே பாரம்
வனக்கிளியே மலர்த்திருவே முனீஸ்வரரின்
பங்கில் வளர் வனிதை மாதேயென்
மனக்கவலை யார்க்குரைப்பே னெனக் கிரங்க
வேண்டும் வடிவழகித் தாயே,

இராகம் சங்கராபரணம், தாளம் சாப்பு.

பல்லவி.

காணும லிருந்தேனே
முனீஸ்வரரைக்

அனுபல்லவி.

காணுமலிருந்துவீண் காலங் கழித்தேனே
கருணைவள்ளல் வடிவழகி நாதன் தன்னை .... காணு

சரணம்.

திரிபுர மெரித்தானைச்
செங்கையில் மான் றரித்தானை
கரியுரியைப் போர்த்தானைக்
கங்கை தன்னை யணிந்தானை ....காணு

அரி யயனும் வந்தானே
அஞ்செழுத்தா யுதித்தானே
உருவிலியை யெரித்தானே
ஒளி வெண்ணீ றணிந்தானே .... காண

தலைமாலை தரித்தானே
தக்கன் சிரந் துணிந்தானே
உலகெல்லாம் நிறைந்தானே
உவமை யேது மிலாதானே .... காண

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

முன்பொடு பின்புமின்றி முடிவுறு முதலே முன்செய்
வன்புறு பிணியினாலே வன்றலைப் பட்டுலைந்தேன்
புனபிறவிக் குளானேன் புகலிடம் பிறிதொன்றில்லை
அன்பனே முனீச்சுரத்தி லப்பனே யருள் செய்வாயே.

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

இனம்பிரிந்த மானதுபோ லுடல்பதைத்து
வறுமையோடிளைத் தென்னாளும்
மனம்பதறி யுழன்றுழன் றிங்கடியேனுக்
கருள்புரிய வன்நெஞ்சோ தான்
தனம்படைத்த பெருக்கமதோ திருவனந்தம்
பராமுகமோ தாயே யென்மேல்
வனஞ்செழித்த முல்லைவன முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித் தாயே.

இராகம் சௌராஷ்ட்ரகம், தாளம் சாப்பு.

பல்லவி.

அருள் புரிந்தீரே
ஸ்ரீ இராமசுவாமிக்

அனுபல்லவி.

அருள்புரிந் தீரே யவனிமீது
அடியார் படுந்துயரை நீக்கி........................அரு

சரணம்.

இராவண சம்மாரஞ் செய்த
இராம சாமியைப் பிரம்ம ஹத்தியாந்
தோஷந் தீண்டாமற் பாதுகாக்கவே
தோற்றங் கொடுத்துக் காத்து ரட்சித்...........அரு

அகஸ்தியர் வந்து தெரிசித்தவன்று
அவரா லாற்றிய பூசைக்குகந்து
வேண்டிய வரமெல்லாங் கொடுத்து
விடையுமீந்தீர் பொதிய மலைக்கேக.................அரு

அன்றவர்களாற் பூசித்த நிமலா
அடியேன் படுந்துயரை நீக்கி
என்றுங் கவலையில் லாமற்காத்து
என்னை ரட்சித் தாண்டருளுவீர் .. ..அரு

முனீஸ்வரர் போற்றி விருத்தம.

ஒருசுயம்பிலிங்கமாகு முனையடைந்தவர்கட்கெல்லாம்
பொருவிலாத்துணையாய் நின்றுய்புண்ணியமாயக்கூடா
கருவிருந் துழல மாட்டேன் கடுமல வாதைதீர (ங்
வருமொரு முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே.

வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம்.

தாயிழந்த கன்றுபோற் பரதவித்து
நிலைகுலைந்து தவித்தென்றனும்
தீயிலுறு மெழுகதுபோ லுருகி மனவெறுங்
கூடாய்த் திகைத்தேனம்மா

தூய கமுநீர் விழியாய் நடம்புரியும்
பதத்தாளே தோகைமாதே
மாயவர்க்குச் சகோதரியே முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித் தாயே.

இராகம் கல்யாணி, தாளம் ஆதி.

பல்லவி.

சங்கரா ஜெகதீசா முனீஸ்வர
சம்போ சதாசிவமே

அநுபல்லவி.

பொங்கர வணிந்தவா பூசுரர் தொழுந் தேவா
புவியி லெந்தனின்—கவலை தீர்த்திடக்
கருணை யில்லையோ—வடிவழகியின்..................சங்

சரணம்.

வேதனே வேத கீதா வித்தகா சத்திநாதா
பாதந் தன்னை யென்—றுளுந் துதித்திடும்
பாவியாகிய—வேழைக் கிரங்குவீர்..................சங்

ஆலமுண்ட கண்டத்தோனே ஞாலந்தன்னைக்காத்தோ
ஆவிசோர்ந்து யான்—நிலைகலங்குறேன் (னே
ஆதரித் தெனைக்— காத்தருளுவாய்..................சங்

சர்ப்பா பரணந் தன்னைத் தரித்த செஞ்சடையோனே
சஞ்சல மெனுஞ்—சாகரத்தினில்
சாடிடவகை—தடுத்தாட் கொள்ளுவீர்..........சங்

முனீசுவரர் போற்றி விருத்தம்.

மையணி கண்டத்தோடு வானுதற் கண்ணுமின்றி
மெய்யுணர் குருவாய்த்தோன்றி வெளிப்படுமுதலே
(முன்னாள்)
வையம்மீ தகத்தியர்க்கு வரங்கொடுத்தருள் புரிந்த
ஐயனே முனீச்சுரத்தி லப்பனே யருள் செய்வாயே.

வடிவழகி யம்மை ஆசிரிய விருத்தம்

பொல்லாத காலமெனுந் தன்மைதனை யென்னு
மிங்குநின்று போற்றிப் போற்றிச்
சொல்லாத நாளுமுண்டோ சொன்னாலுங்
கேட்கிலையோ யென் சொற் கூச்சல்
எல்லாரும் வாழ்ந்திருக்க யானொருவன்
தாழ்ந்திருக்க வியலோ வம்மா
வல்லாருங் களப முலைமாமயிலே முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித்தாயே.

இராகம் சாரங்கதா, அடதாளம்.

பல்லவி.

அடிமை யானையா—உம
தடிமை யானையா

அநுபல்லவி.

அடிமை யாகினேன் துயரைத்தீரும்
வடிவழகி மகிழும் நேசா........................அடி

சரணம்.

மனுநீதி கண்ட சோழ மகராசன்
வம்மிசத் துதித்த ராமதேவர்க்கு
தீராத பெருங் கருங் குஷ்டந்தனைத்
தீர்த்துக் காத்து ரட்சித்த தேவரே ....அடி

சமண சமயத்திலுள்ள வரசரிற்
சற்குணனும் புவனேய கயவாகு
புதல்வனில்லாமல் வருத்தமுறவே
புத்திர பாக்கிய மழித்த குருவே..................அடி

தீராக் கவலையிலு லென்னாளுஞ்
சிந்தை மெலிந்து வாடுறேன் நானும்
பாராய் கடைக்கண் நோக்க மென்மீது
பாவி துயரகன் றோடியே போகிட...............அடி

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

நற்றவ நந்திபண்டை நாளடுங் கையமீளப் (ன்றி
பெற்றிட வியாதன் வந்து பெருந்தவ மிழைக்கத் தோ
மற்றவர்க் கருள்புரிந்த வாறெனவந் தென்றுன்பம்
அற்றிட முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே.

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

இருபொழுதும் வறுமையிலு லனுதினமும்
பிணியதனு லிளைத்துவாடி
உருகுவது மயன்விதியோ அல்லவென்றால்
உன்செயலோ வுரைக்கமாட்டேன்
திருவுருவே அருளொளியே தெள்ளமிர்தே
சேயிழையே தேவர் போற்றும்
மருவணியுங் குழலணங்கே முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித்தாயே.

இராகம் பயிரவி, தாளம் திரிபுடை.

பல்லவி.

அத்தனே யுந்தன் சித்த மிரங்கலையா
எத்திசையும் புகளீசனே வாசனே

அனுபல்லவி.

பத்தர்க் கென்னாளும் முத்திவழிகாட்டிப்
பங்கப் படுபவர்க்கின்ப வழிகாட்டும்............... ...அத்

சரணம்.

சக்கிர வர்த்தி நளமகராசன்
சனிபகவான் தோஷத்தாலே
எத்திசைகளும் சுத்தியலைந்து
இங்கு வந்துன்றன் கிருபைபெற்ருரே.......... ...அத்

வேதவியாசற்குக் காசியம்பதியில்
விளைந்த தீமைதன்னைத் தீர்க்கவே
மாது வடிவழகி யோடு நீர்
மகிழ்ந்து தோற்றங் கொடுத்துக் காத்த..........அத்

இத்தனை காலமும் நித்தியமும் வந்து
பத்தியோ டுந்தன் பாதம் பணிந்தேனே
கத்தனே யுந்தன் கருணையென் மீது
காட்டமனதில் வருத்த மேதையா..................அத்

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

எஞ்சலில் புகலிதென்றன் றேவர ராமதேவன்
அஞ்சொருவழித்தாய் ஏத்தி யருள்பெறவழித்தா ளேழை
பஞ்சல வாழ்தன்னுட்டாழ்ந்துநொந்தழல லானேன்
அஞ்சலென் முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

நஞ்சுதின்ற பேர்களைப் போலுடல் மயங்கி
வறுமையினால் நலிந்தென்னுளுஞ்
சஞ்சலமே சமுத்திரமா மலையதனிற்
றுருப்பதுபோற் றவித்தே னம்மா
கொஞ்சுகிளி மொழியாளே சஞ்சமலர்க்
கரத்தாளே மகாதை மானே
வஞ்சியிடைத் திருவணங்கே முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித் தாயே.

இராகம் எதுகுல காம்போதி—தாளம் சாப்பு.

பல்லவி.

தந்தையே யின்னமுந் தயவில்லையோ
யென்றன் விதியின் கெதியிதுவோ ஓது

அனுபல்லவி.

கந்த மலர்ப்பாதனே யெழியயென்னை நீ பாது
காக்காவிடில் பின்னெவர்கை தூக்குவரிப்போது...தந்

சரணம்

மூத்தின பின்பு யான் செய்திட்ட பாவமோ
மொழியப் போகாதடியேன் பரிதாபமோ
அத்தனே யென்றனுக் கயன் விதித்த விதிதாமோ
ஆதரையிலுந்த னடியார் செய்கோரமோ......... தந்

பெற்றவ ரிருக்கப் பின்னெங்கு செல்லுவேன்
பேதமதியை யானெவ்விதம் வெல்வேன்
கத்தனே யென்றனின் கவலையெவ்விதந் தேற்றுவேன்
காத்துரட்சிப்பாயென் றெத்தனைதரம் போற்றுவேன்

இடபவாகன மேறி என்முன் நீ வாராயா
கொடியபாவி தன்னிற் குறையை நீ தீராயா
அடியவன் கணேசன்தன் கவிக்கு நீ யிரங்காயா
ஆண்டவா மோட்ச வீடதனை நீ தாராயா.........தந்

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

நலந்திக ளுசலிற் கோடன் நளன்கயவாகு வானோர்
நலிந் திறைஞ்சியேவேண்ட நல்வரமழித்தா யேழை
உலந்திடாப்பாவவஞ்சரோடுசேர்ந்துள்ளம்நைந்தேன்
அலந்தனன் முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே

வடிவழகி யம்மை ஆசிரிய விருத்தம்

அதிமதுர நாவினாலும் நற்பாவைப்பாடுவதுமுன்
செயுலே யதுவல்லாமல்

நதிதரித்தோ ரிடப்பாகம் விளங்குகின்ற
மாமயிலே நளின மானே
கெதிபெறவே யடியேனுக் குனதுபதந்
தந்தருள்வாய்கிருபைவைத்து
மதிநுதல்போற் றிருவணங்கே முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித்தாயே

இராகம் தோடி, தாளம் மட்டியம்.

பல்லவி.

எத்தனை தரஞ் சொல்லுவேன்
என் துயரத்தை யுமக்கு

அநுபல்லவி.

அத்தனே அரி அயன் றேடிக்காணு வேதனே
கத்தனே நித்தியானந்த கருணாகர நாதனே.........எ

சரணம்.

ஐங்கரன் றனைப்பெற்ற ஆதியான தேவனே
கங்கை வேணியனே கருணாநந்த நாதனே
திங்களைத் தரித்தோனே சிறந்த செங்கரத்தோனே
மங்கை வடிவழகிப் பங்கிலுறை கின்றோனே...... எ

வேதம் நான்கினுக்கு மாதார மாகிநின்றவா
சாதி சம்பந்த மின்றித் தனியனாகி வந்தவா
காதல்கொண்டே யடியார்கவலை தீர்க்க வந்தவா
பேதமில்லாமலெந்தன் பெருந்துயர் தீர்க்க நீவா...எத்

முற்றாத சந்திரனை முடிமீதணிந்தாய்நீயே
பெற்றதந்தையைப் பெற்ற பிதாவுமாகினாய் நீயே
கற்றறிவில்லாத கணேசன் கவியை நீயே (நீயே
குற்றமெலாம் பொறுத்தென் குறையைத் தீர்ப்பாய்

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

சிந்தையோ டரசர் மற்றோர் திருப்பணி பலவுமாற்றி
வந்தனை செய்து போற்ற வரம்பல வழித்தா யேழை
நொந்துனை யடைந்தேனை வேளை நுவலி லீதன்றியில்லை
அந்தமின் முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

உலையிலிடு மெழுகதுபோ லுருகிமனம்
வெறுங்கூடா யுலர்ந்து வாடி
நிலைகுலைந்து மதிமயங்கி நின்றுமிகப்
பரதவித்தல் நீதியோ சொல்
கலைமகளே வடிவணங்கே கமலமுகத்
திருமாதே கருணையாளே
மலைமகளே யறந்தழைக்கும் முனீஸ்வரர்க்கு
வாய்த்த வடிவழகித் தாயே.

இராகம் மோகனம், தாளம் ஆதி.

பல்லவி.

நீ தயவா யென்னை யாளுவாய்
நித்தியா னந்தப் பரம்பொருளே

அனுபல்லவி.

தாதகி சூடிய தோளாவுமை
காதலா குஞ்சிதத் தாளா

சரணம்.

ஒலிகடல் விடமுண்ட நேயா
ஓங்கார வெழுத்தான தூயா
மெலியுமடி யவர் சகாயா
மெல்லி வடிவழகியின் நேயா.................... நீதய

காலனைவதை செய்த காலா
கரியுரி தனைப் போர்த்த சீலா

வேலனைத் தருமனுகூலா யைந்து
கோலனை வென்ற திரிசூலா.. ....நீதய

மூவர்பரவிய விநோதா திரு
நாவலூரன் விடு தூதா
யாவரும் நம்பின பாதா
நீ வருவாய் இடபவாகன நாதா.................நீதய

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

மட்டிக்கவலையாலும் வன்பிணியாலும் நாயேன்
பட்டபாடுகளை யெல்லாம் பாரினிற் பட்டா ருண்டோ
துட்டர்வாழ் முப்புரத்தைச் சொலித்திடநகையால் மு
(ன்னால்
வட்டவர் முனீச்சுரத்தி லப்பனே யருள்செய்வாயே

வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம்.

இளமைதனில் வறுமையினால் மனதுமிக
நொந்துருகி யிளைத்து வாடி
விளைநிலத்தி லளர் விழுந்த வாறதுபோல்
அடியேனும் விளங்கா நின்றேன்
குழையுடைச்சி அன்னநடை குயில்மொழிச்சி
நீ கருணைகூர்ந்து ரட்சி
தலைமொழிக் குயிலணங்கே முனீஸ்வரர்க்கு
வாய்த்தவடி வழகித்தாயே.

இராகம் சுருட்டி. தாளம் ரூபகம்.

பல்லவி.

கருணை புரிகுவாய் யீசா
கருணை புரிகுவாய்

அனுபல்லவி.

கருணை புரிய இதுவே தருணம்
திரிபுர தகன நாதா வாசா........ ....

சரணம்.

அகஸ்த்திய மகாமுனிவர் தமக்கும்
அருளிற் சிறந்த நளமகராசர்க்கும்
வீரராம தேவமகிபர் தமக்கும்
மகிழ்ந்து அருள் புரிந்த வாசா..................கருணை

பாரிற் குளக்கோட னென்று வழங்கிடும்
பாலசிங்கு மகராசர் தமக்கும்
வேதவியாச முனிவர் தமக்கும்
வேண்டியவர மீய்ந்த யீஸுவரர்

புவனேய கயவாகு வென்னு மரசர்க்கும்
புசபலன் மனுனேய கயவாகு ராசருக்கும்
புரிந்தீர் கருணை சிறந்த வள்ளலே
வருந்து மேழையின் துயரையும் போக்கிநீர்...கருணை

முனீஸ்வரர் போற்றி விருத்தம்.

எனதரு மந்தநெஞ்சை யிராப்பகலாய்ப் பாழான
வினைதனிற் களித்தேன்மேலாம் வீடுசேர் முயற்சி கெ
(ட்டேன்)
தினமுந் நன்மைக்காய்த் தீமை செய்யுமென்பிழை பொ
(றுத்தே)
டனையன்யான் முனீச்சுரத்தி லப்பனேயருள் செய்வா
(யே)

வடிவழகி யம்மை யாசிரிய விருத்தம்.

திடமுடனே யுனைப்பாடச் செல்வமுண்டாங்
கல்வியுண்டாஞ் சிறப்பதாகும்
அளவுடனே யிப்புவியி லெந்தனது மொழிக்
கிரங்கி யருளே செய்து

சடைமுடியா ரிடப்பாகம் பச்சைநிறமாய்
நின்ற தையல்மானே
மடமயிலே யுன்னுடைய மலர்ப்பாதம்
தந்தருள்வாய் வடிவழகித் தாயே

இராகம் மத்தியமாவதி, தாளம் ஆதி.

பல்லவி.

என்னை நீருங் கைவிட்
டாலென் செய்வ னீசா

அநுபல்லவி.

பின்னை யெதிங்கியாரும்
என்னை யாண்டருள்வீர்...............................என்

சரணம்

ஆவிசோர்ந்து யானும் கூவியழலானேன்
பாவிதுயர் தன்னைத் தாவிவந்து தீர்ப்பாய்.........என்

மெத்த மெத்தத் தேசம் சுத்தி யலைந்தேனே
எத்திசையும் நன்மையின்னும் காண்கிலேனே......என்

அங்கு மிங்கு மோடியலைந்து கெட்டுநொந்தேன்
இங்குன் கிருபை தந்து ரட்சிப்பாய் நீயே.........என்

கவி.

பஞ்ச பாதகங்கள் போம்
பழைய நோயறும்
நெஞ்சினில் முனீஸ்வரர்
நினைவிருந்திடில்
வஞ்சநோயொழிந்திடும்
வறுமை நீங்கும்
தஞ்சமென்றடைந்தவர்
தம்மைக் காப்பரே

முற்றிற்று.